**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.24/2024 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு. சம்பத் |
| Husband/Father Name | கொலக்கன் |
| Village /Area | கண்டிகை சயினபுரம் |
| Taluk | நெமிலி |
| Occupation | கூலி |
| Age | 65 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 02.07.2025.

**(எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர். எதிரி 5 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

26.02.2016 அன்று மதியம் 03.00 மணியளவில் எனக்கு போன் மூலமாக எங்கள் தெருவை சேர்ந்தவர்கள் மணி, அருண்குமார், அசோக், யசோதா ஆகியோர் வீட்டின் முன்பிருந்த வேகத்தடை எடுக்க போன போது என் மகன் தனசேகர் என்பவரையும் கிருஷ்ணன் என்பவரையும் கத்தியால் குத்திவிட்டதாக தகவல் தெரிந்தது. எனது மகன் பெட்ரோல் பங்கில் வேலை செய்து வந்தார் வேலை முடிந்து வீட்டிற்கு வந்த போது தான் மேற்படி சம்பவம் நடந்தது. நான் எனது மகனை புன்னை அரசு மருத்துவமனைக்கு முதலுதவிக்காக அழைத்து சென்றேன். அங்கு அவருக்கு குடல் சரிந்து விட்டதாக கூறி தையல் போட்டார்கள். பிறகு என் மகனை என் மனைவி மற்றும் உறவினர்கள் அழைத்துக்கொண்டு சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு சென்றனர். அங்கு என் மகன் இறந்து விட்டதாக சொன்னார்கள். நான் எனது தம்பி கிருஷ்ணன் அவருடைய மனைவியையும் அழைத்து

கொண்டு அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் அவரது மேற்சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் அனுமதித்தோம். மறுநாள் இது சம்பந்தமாக நான் நெமிலி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அதசா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

மனுவின் பேரில் குறுக்கு விசாரணைக்காக நிறுத்துவைக்கப்படுகிறது.

**ஒம்./–திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**